PRODUCED BY AN AUTODESK EDUCATIONAL PRODUCT




# காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக்குழுமம்

## காஞ்சிபுரம் மாநகராட்சி

| | | |
|---|---|---|
| மாவட்டம் | — | காஞ்சிபுரம் |
| வட்டம் | — | காஞ்சிபுரம் |
| கிராமம் | | விஷ்ணுகாஞ்சி |
| நி.அ.எண் | — | **18/208** - ல் அமைந்துள்ள சமுதாயக்கூடப்பகுதியை குடியிருப்பு மனைப்பிரிவாக மாற்றுதலுக்கான ஒப்புதல் வரைபடம் |
| அளவு | | 1 : 800 (1"=66') |
| பழைய கோப்பு எண் | — | 6544/1994 எல்ஏ3 |
| புதிய கோப்பு எண் | — | 1 QWDUTFC / 2022 |
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | — | 909 ச.மீ 9584 ச.அடி |
| ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட | — | |
| மனைகளின் எண்ணிக்கை | — | 296 Nos |
| சமூக கூடப்பகுதியில் அமையும் மனை எண்கள் | — | 297 முதல் 308 வரை (EWS - 299 முதல் 308 வரை) |

மனைப்பிரிவின் எல்லை..........

நிலையிலுள்ள சாலை..........

**பொது ஒதுக்கீடுகள்:**

ஆரம்ப பள்ளி : 5934 ச.அடி

கடை : 9575 ச.அடி

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதி:**

பூங்கா - : 88277 ச.அடி

**தற்போது உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட பகுதிகள்:**

பொது உபயோகம் - : 50 ச.அடி

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு ஒப்படைக்கப்படவேண்டிய பகுதி : 50 ச.அடி

தானபத்திர எண்- 777 /2023 நாள்.13.02.2023-ல் பொது உபயோப்பகுதிகள் காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

| | கட்டிட வரம்பு | மூலைமுடக்கு |
|---|---|---|
| 24'-0"(7.20மீ) சாலைக்கு .......... | 1.50மீ .......... | 1.5மீ x 1.5மீ |
| 30'-0"(9.0மீ) சாலைக்கு .......... | 3.0மீ .......... | 1.5மீ x 1.5மீ |

## நிபந்தனைகள்:-

1. இம்மனைப்பிரிவுக்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதபட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. அரசாணை எண்.18 நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16 31.01.2020நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை - ன்படி சாலை ஒதுக்கீடுகளை (ம) பொது உபயோக பகுதியினை உள்ளாட்சியே தானமாக பெற்றுக்கொண்டு பராமரிக்க வேண்டும் என்றும், நில உரிமம் குறித்து உள்ளாட்சியே முழுப்பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது.

3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் அரசாணை எண்:181 வீ.வ (ம) ந.வ.-ன் நாள்: 09.12.2020 Para 4(IV) -ல் தெரிவித்த கீழ்கண்ட நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.

உள்ளாட்சி அமைப்பு, மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல்/ உரிமம் வழங்குவதற்கு முன் மனுதாரர் சாலை அமைப்பு வரைபடத்தின்படி தார்சாலைகள் அமைத்துள்ளதை உறுதிசெய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.மேலும் OHT அமைத்து நீர் வழங்குதல் வசதிகள், கழிவுநீர் வடிகால் (ம) தெருவிளக்குகள் போன்ற வசதிகள் உள்ளாட்சி அமைப்புகளால் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ளதா என்பதனை உறுதி செய்து இறுதி ஒப்புதல் அளிக்கப்பட்ட விபரத்தினை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் ரத்து செய்யப்படும்.

5. இவ்வலுவலகத்தால் ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபட நகல் வழங்கப்பட வேண்டும்.

6. இவ்வலுவலகத்தால் ஒப்புதல் அளிக்கப்படும் மனைப்பிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்காக சம்மந்தப்பட்ட இடத்தில் 6'0" x 4'0" என்ற அளவுக்கு குறையாமல் காங்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

7. சாலை அமைப்பு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மின்வாரியத்திற்காக (TANGEDCO) ஒதுக்கப்பட்டுள்ள இடத்தினை மின்வாரிய (TANGEDCO) பயன்பாட்டிற்காக இடத்தின் அளவுகள், பரப்பளவு ஆகிய விவரங்களுடன் குறிப்பிட்டு தானமாக தானப்பத்திரம் மூலம் மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைளகுடன் பின்பற்றப்படவேண்டும்.

சாலை அமைப்பு வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

9. மனைப்பிரிவில் அமையும் ஒப்படைப்பு செய்யப்பட்ட சாலைகளை தடை செய்யாமல் புழக்க சாலைகளாக நிலை நிறுத்தப்பட வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்:-

நகர் ஊரமைப்புத்துறை சட்ட பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி (அ) திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

APPROVAL NO;SWP/DTCP/KANCHIPURAM-LPA/LAYOUT No: 24/2023 | வ

(SHOULD BE READ ALONG WITH ALREADY APPROVED NO.DTCP-548/1994)

ந.க.எண்:- 6265/2023/எ1 நாள்:- 24/4/25
துணை இயக்குநர் (பொ) மாவட்ட
நகர் ஊரமைப்பு அலுவலகம் அவர்களின்
கடிதம் ந.க.எண்:- QWDUTPC/2022/TCP
நாள் 24/4/2023 தொழில்நுட்ப அனுமதி
எண்: SWP/DTCP/காஞ்சிபுரம் Layout
எண்: 24/2023 ன் படி இவ்வலுவலக
ந.க.எண்:- 6265/2023/எ1 நாள்:- 24/4/25
இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

COMMISSIONER
KANCHEEPURAM CITY MUNICIPAL CORPORATION
24/4/2025

Document certified by Shantha Kumari P.
Signed by: Deputy Director
Location:Kancheepuram
Date:2023.04.24 15:57:46

துணை இயக்குநர் / உறுப்பினர் செயலர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
காஞ்சிபுரம் மாவட்டம்.

PRODUCED BY AN AUTODESK EDUCATIONAL PRODUCT
PRODUCED BY AN AUTODESK EDUCATIONAL PRODUCT
PRODUCED BY AN AUTODESK EDUCATIONAL PRODUCT